**அம்பாந்தோட்டை மாநகர சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 21 ஆந் திகதி சபையின் நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாந்தோட்டை மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாநகர சபையாக நியமிக்கப்பட்டதன் பின்னர் அம்பாந்தோட்டை பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்ட ரூபா 68,002,818 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 4,262,501 தொகையான பொறுப்புக்கள் என்பன நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,951,563 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செலவினமான ரூபா 178,429 பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

(இ) மகநெகும மற்றும் மாகாண குறித்தொதுக்க வேலைகளுக்காக மீளாய்வாண்டில் சபைக்குக் கிடைத்திருந்த மூலதன வருமானம் ரூபா 36,182,909 ஆக இருந்த போதிலும் வருமானத் தலைப்பு 30381 இன் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 714,048 ஆக அதிகரித்து ரூபா 36,896,957 என எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதான பேரேட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காக மீளளிப்புச் செய்யக்கூடிய மூலதன மானியத்தின் பெறுமதியான ரூபா 28,254,882 இல் ரூபா 28,065,713 தொகை மீளாய்வாண்டில் கிடைத்திருந்தது. முன்னைய ஆண்டின் வேலைகளுக்காக மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 189,169 தொகை மீளாய்வாண்டின் மூலதன மானியக் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதான பேரேட்டின் மூலதனச் செலவினக் (3-9) கணக்கிலிருந்து வருமானச் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 38,060,776 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக்கிற்கு ரூபா 472,102 குறைத்து ரூபா 37,588,674 ஆக எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபையினால் எதிர்வரும் வருடத்திற்காக செய்யப்பட்ட ரூபா 266,384 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் இலக்கம் 1204 ஸ்ரீ (எஸ்எப்) இன் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக வழங்கப்பட்ட இயந்திர பொறிமுறைகளுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 895,136 தொகையான கடன் பணத்திற்காக கடன் தவணைப் பணம் ரூபா 201,406 தொகை மற்றும் வட்டி ரூபா 169,336 ஆக 09 அரையாண்டு தவணைப் பணம் 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,071,810 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,491,342 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 5,564 | 6,388 | 2,928 |
| (ii) | வாடகை | 13,245 | 13,078 | 2,878 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,578 | 1,883 | 50 |
| (iv) | ஏனைய வருமானம் | 50,822 | 50,763 | 31,973 |

### 2.2.2 ஆதன வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 2,903,886 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 225,922 தொகை முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை

வருமானமாகும். இந்த நிலுவை ஆதனவரித் தொகையை அறவிடுவதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 2,877,739 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 253(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆவது பிரிவின் மூலம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகைப் பணம் புதிய மதிப்பீட்டாளரின் மூலம் திருத்தப்பட வேண்யமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அம்பாந்தோட்டை பொதுச் சந்தையின் பஸ் நிலையம் மற்றும் சந்தைத் தொகுதியின் கடைகளிலிருந்து 2007 பெப்ரவரி முதல் அறவிடப்பட்ட வாடகைப் பணம் 2015 மார்ச் 18 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 1980 செப்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி முதல் அம்பாந்தோட்டை வாடி வீடொன்றின் முகாமைத்துவம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் சபை எழுத்துமூல உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாதிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,230,000 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. உடன்படிக்கை செய்யப்படாமையாலும் நிலுவை வாடகையை அறவிட முடியாமையின் காரணமாகவும் இந்தப் பெறுமதியை பதிவழிப்பதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,527,739 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

ஆலோகபுர முன்பள்ளிப் பாடசாலையின் இரண்டு ஆசிரியைகளுக்கு 2006 பெப்ரவரி முதல் 2012 செப்தெம்பர் வரையிலான காலத்திற்குரிய செலுத்தவேண்டிய ரூபா 211,230 தொகையான நிலுவை ஊழியர் சேமலாப நிதியம் 2014 திசெம்பர் 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய பிரகாரம் பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் ரூபா 67,230 மிகைக்கட்டணமொன்றையும் செலுத்தவேண்யேற்பட்டிருந்ததுடன் ரூபா 57,600 தொகையான ஊழியர் பங்களிப்புப் பணமும் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 57,600 தொகையை இரண்டு முன்பள்ளி ஆசிரியைகளிடமிருந்து அறவிடுவதற்கு 2015 மே 18 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் அமைப்புக்களுக்காக நிர்மாண வேலைகள் மாத்திரம் கையளிக்கமுடியுமாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான டெக்ரர் மற்றும் மூன்று டேலர்களை பழுதுபார்ப்பதற்காக விவசாய அமைப்பொன்றிற்குக் கையளிக்கப்பட்டு 2013 திசெம்பர் 18 ஆந் திகதி ரூபா 113,300 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 182,110 தொகையான பொருட்களும் உபகரணங்களும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு விவசாய அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய பேரூந்து வண்டியை பழுதுபார்ப்பதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கூறுவிலை கோரப்படாமல் நிறுவனமொன்றிற்கு ரூபா 430,500 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தலின் இறுதியில் உரிய நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 841,200 தொகையான விலைப்பட்டியலின் படி ஆரம்பத்தில் இணங்கப்பட்ட தொகையைவிட ரூபா 410,700 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 32 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 169,730 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் அமுல்படுத்தப்பட்ட 03 வேலைகளில் வீதியின் அடிப்பகுதிக்காக ABC கலவை பயன்படுத்தப்பட்டதாகக் காண்பித்து ரூபா 71,316 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 மே 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த வீதிக்காக ABC கலவை போடப்பட்டிராதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 03 வேலைகளுக்காக அந்த வீதிகளின் அடிப்பகுதிக்கு கற்துண்டுகளுடன் கற்தூள் இடுவதற்காக தேவையான அளவைவிட கூடுதலாக கற்தூள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 33,001 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் காலி முதல் மாத்தறை வரையிலான கட்டத்தைத் திறந்து வைப்பதற்காக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிப்பதற்கு 2014 யூன் 03 ஆந் திகதி ரூபா 218,400 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 188(1) இன் கீழ் இவ்வாறான செலவினங்களுக்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்